**<u>22.08.2022 O.S.No. 24 / 2020 (PW1) அன்னபூரணி க-பெ. வேலுச்சாமி,</u>**

**<u>1,5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) எனக்கு எழுதப் படிக்க தெரியாது, ஆனால் கையெழுத்து மட்டும் போடுவேன். எனது தாயார் பெயர் வள்ளியம்மை. வள்ளியம்மையின் கணவர் பெயர் காளிமுத்து. வள்ளியம்மையின் மாமியார் பெயர் சிட்டாள். சிட்டாளின் கணவர் பெயர் சுப்பன் நாடார். மேற்படி வள்ளியம்மைக்கு நானும், 1 முதல் 4 பிரதிவாதிகளும் மகள்கள் என்றால் சரிதான். மேற்படி சிட்டாளிற்கு இரண்டு திருமணம் நடந்துள்ளது. முதலில் சிட்டாளை சுப்பன் நாடாரின் அண்ணனுக்கு திருமணம் செய்தார்கள். சிட்டாள் என்பவரை முதல் திருமணம் செய்த வகையில் இரண்டு மக்கள் அவர்களுக்கு உள்ளனர். அவர்களது பெயர் தெரியவில்லை. மேற்படி சிட்டாளின் மகன்தான் காளிமுத்து நாடார் என்றால் சரிதான். காளிமுத்து நாடார்தான் வள்ளியம்மைக்கு கணவர் என்றால் சரிதான். மேற்படி காளிமுத்து நாடார் சிட்டாளின் முதல் கணவர் மூலம் பிறந்த மகன் ஆவார். வள்ளியம்மை எனக்கு 2009ல் ஓர் உயில் எழுதியுள்ளார். அந்த உயிலின் அசல் வீட்டில் உள்ளது. வா.சா.ஆ.9 உயில் ஆவணத்தை சாட்சியிடம் காண்பித்தபோது அதிலுள்ள எழுத்துக்களை படிக்க தெரியாது என்று கூறினார். மேற்படி வா.சா.ஆ.9 ஆவணத்தில் உயில் எழுதியவர் பெயர் வள்ளி என காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். வள்ளியம்மை பெயரில் 10க்கு மேற்பட்ட சொத்துக்கள் பட்டாவில் உள்ளது என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.9 ஆவணத்தில் புல எண்.58/2/C1, புல எண்.58/2C2 குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. உயிலில் நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. 1 முதல் 4 பிரதிவாதிகள் எனது தாயாருடன் அன்பாகவும், பாசமாகவும்தான் இருந்தனர் என்றால் சரிதான். ஒரு உயில் எழுதிக் கொடுத்த பிறகு எனது தாய் உயிரோடு இருந்தபோது ரத்து செய்வதற்கு உரிமை உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஒரு உயில் எழுதிய பிறகு அந்த உயில் தொடர்பாக உள்ள சொத்துக்களில் சிலவற்றையோ, முழுமையாகவோ வேறொரு மாற்றாக்க ஆவணம் எழுதி வைத்தால் மேற்படி உயில் ரத்தாகிவிடும் என்றால் சரியல்ல. 27.10.2010ந் தேதியில் எனக்கு வள்ளி என்பவர் திருமனவயல் குரூப், சர்வே எண்.488ல் புஞ்சை 62.5 ஏர்ஸ் மற்றும் சர்வே எண்.489ல் 1.11.5 ஹெக்டேர் நிலங்களை எனக்கு பதிவு செய்யப்பட்ட கொடை ஆவணம் மூலம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். சிட்டாளிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் எனக்கும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பங்கு உண்டு என்றால் சரிதான். மேற்படி சிட்டாளின் சொத்துக்களில் எனக்கும், எனது உடன்பிறந்தவர்களுக்கும் சமபங்கு உண்டு என்றால் சரிதான். வள்ளியம்மையின் சொத்துக்களில் எனக்கும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் அதில் சமபங்கு உள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

A DHARANIDHARAN

Deposition
Digitally signed by A DHARANIDHARAN
Location: District Munsif Court Devakottai
Date: 2022.08.22 18:45:39 +0530